00197

இலங்கை திறந்த பல்கலைக் கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டத் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II – 2022/2023

LLU4806/LWU2312– குற்றவியல் சட்டம்

நேரம் : 1 மணித்தியாலம்

---

திகதி: 03.12.2023 காலம்: மு.ப. 11.30 – பி.ப 12.30

---

மொத்த வினாக்களின் எண்ணிக்கை – 02

**ஒரு** வினாவிற்கு மட்டும் விடையளிக்க.

தெளிவற்ற கையெழுத்திற்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. கிரிலவெல்ல என்று அழைக்கப்பட்ட ஒரு சிறிய கிராமத்தில் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டு, அதன் விளைவாக சுற்றியிருந்த வயல் நிலங்கள் மோசமாக தீக்கிறையாகின. காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் சமன் என்ற விவசாயி, குறித்த பகுதியைச் சுற்றியிருந்த நியதிச் சட்ட ரீதியாக பாதுகாக்கப்பட்ட சில மரங்களை வெட்டினார். உரிய அரச அதிகாரிகளின் முன் அனுமதியின்றி நியதிச் சட்ட ரீதியாக பாதுகாக்கப்பட்ட மரங்களை வெட்டுவது சட்ட விரோதமானது என அப்பகுதி கிராம மக்கள் சமனை விமர்சித்தனர். அவர்கள் அருகிலுள்ள காவல் நிலையத்திற்குச் சென்று, சமனுக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டனர்.

   இதற்கிடையில், அஜித் எனும் மற்றொரு விவசாயி, சமனை நோக்கி ஓடி வந்து அவரிடம் பெறுமதி மிக்க மரங்களை சட்ட விரோதமாக ஏன் வெட்டினாய் என வாக்குவாதம் செய்தார். அப்போது சாலையோரத்தில் கிடந்த தடியொன்றை எடுத்த அஜித் சமனை கொல்லுவதாக மிரட்டினார். பிறகு, சமன் அஜித்தை ஒருபுறமாக தள்ளினார், அதன் விளைவாக அவர் கீழே விழுந்ததுடன், தலை நிலத்தில் அடிபட்டு, கடுமையான காயங்களையும் ஏற்படுத்தியது.

   மேலுள்ள நிகழ்வுச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு, கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

   அ. நியதிச் சட்ட ரீதியாக பாதுகாக்கப்பட்ட மரங்களை சட்ட விரோதமாக வெட்டியமை தொடர்பான குற்றவியற் பொறுப்புடைமையிலிருந்து விதிவிலக்கினைக் கோருவதற்கு சமனினால் பயன்படுத்தக் கூடிய மிகப் பொருத்தமான பாதுகாப்பு என்ன? ஆராய்க.

   ஆ. அஜித்திற்கு ஊறு ஏற்படுத்தியமைக்கு குற்றஞ் சாட்டப்படும் குற்றவியற் பொறுப்புடைமையிலிருந்து விதிவிலக்கினைக் கோருவதற்கு சமனினால் பயன்படுத்தக் கூடிய மிகப் பொருத்தமான பாதுகாப்பு என்ன? ஆராய்க.

   உமது விடையினை இயைபான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தின் மூலம் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

2. சில வருடங்களுக்கு முன்பு நிரோஷாவுக்கும் சன்னவுக்கும் இடையே காதல் தொடர்பு ஒன்று இருந்தது. ஒரு மழை நாளில், அவள் எதிர்பாராவிதமாக, நகரின் தனிமைப்படுத்தப்பட்ட ஓர் இடத்தில் சன்னவை சந்தித்தாள். சன்ன அவர்கள் காதலிக்கும் போது, அவளுக்கு பரிசாகக் கொடுத்த நகையினை கேட்டுள்ளார். நிரோஷா குறித்த நகையினை வாங்குவதற்கு தனது பணத்தினை செலவளித்ததாகக் குறிப்பிட்டு வாதிட்டாள். அப்போது, சன்ன இழிவான வார்த்தைகளின் மூலம் திட்டியதுடன், அவளைக் கொன்று விடுவதாகவும் அச்சுறுத்தினான். சிறிது நேரத்தின் பின்பு, தெருவின் ஒரு மூலைக்கு நிரோஷாவை இழுத்துச் சென்ற சன்ன, அவள் கழுததில் அணிநதிருந்த தங்கக் கழுத்தணியினை பறித்துக் கொண்டு அப்பால் ஓடினான். இச் சம்பவம் தொடர்பாக நிரோஷா அருகிலுள்ள காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தாள்.

மேற்தரப்பட்ட நிகழ்வின் சூழ்நிலைக்கமைவாக சன்னவினுடைய குற்றவியற் பொறுப்புடைமையினை ஆராய்க.

உமது விடையினை இயைபான நியதிச் சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தின் மூலம் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

பதிப்புரிமைப் பெற்றது.